**செய்தி வெளியீடு எண்: 260** **நாள்: 08.04.2020**

# செய்தி வெளியீடு

கோவிட் 19 தொற்றினை எதிர்கொண்டு, சமாளிப்பதற்கான பணிகளைக் கருத்தில் கொண்டு, நிறுவனங்கள் மற்றும், பொது மக்கள் முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு மனம் உவந்து பங்களிப்பினை அளிக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு அளிக்கப்படும் நிதியை பெருநிறுவன சமூகப் பொறுப்பு நிதி (CSR Fund)யாக கணக்கிட தெளிவுரை வழங்குமாறு பல்வேறு நிறுவனங்கள் கோரியுள்ளனர்.

மத்திய அரசின் பெருநிறுவன விவகாரங்கள் துறை தனது சுற்றறிக்கை எண்.10/2020, நாள்.23.03.2020–ன் வாயிலாக, Schedule VII/Companies Act 2013, item nos.(i) மற்றும் (xii) ல் குறிப்பிடப்பட்டுள்ள மக்கள் நலம் பேணுதல், மேம்படுத்துதல், சுகாதாரம், நோய்த் தடுப்பு, தூய்மைப்பணி, பேரிடர் மேலாண்மை ஆகிய இனங்களின் கீழ் கோவிட்–19 வைரஸ் தடுப்புப் பணிகளுக்கு அளிக்கப்படும் நிதியும், பெருநிறுவன சமூக பொறுப்பு பங்களிப்பிற்கு தகுதி பெறும் என தெளிவுரை வழங்கியுள்ளது.

எனவே, தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் 24.3.2020 நாளிட்ட ஆணையின்படி, 24.3.2020 முதல் 30.6.2020 வரை முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு கிடைக்கப்பெறும் நன்கொடையைக் கொரோனா (COVID - 19) தொற்று நோய் தடுப்பு பணிகளுக்குப் பின்வருமாறு பயன்படுத்திட தமிழ் நாடு அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

- தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்தல்,
- மருத்துவமனைக்கு தேவைப்படும் நுகர்பொருட்கள் மற்றும் வென்டிலேட்டர் முதலிய மருத்துவ உபகரணங்கள் வாங்குதல்;
- தனிமைப்படுத்துதல் மற்றும் தனிமைபடுத்தப்பட்ட வசதி,

- பொது சுகாதார உள்கட்டமைப்பு மற்றும் தடுப்பு சுகாதார பராமரிப்பு உருவாக்குதல்;
- வீடற்ற ஏழைகள் மற்றும் புலம்பெயர்ந்த பணியாளர்களுக்கு உணவளித்தல்
- உலர் உணவுப் பொருட்களை வழங்குதல்.

எனவே, பெருநிறுவனங்கள் மற்றும் இதர தொழில் நிறுவனங்கள் இதன் மூலம் கிடைக்கும் வருமான வரிச் சலுகையை கருத்தில் கொண்டு, கோவிட்–19 தடுப்பு பணிகளை இன்னும் சிறப்பாக மேற்கொள்ள வசதியாக ளமுதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு தாரளமாக நன்கொடை வழங்கி அரசுக்கு தங்களது ஒத்துழைப்பை நல்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**